# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.460/2013 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2019ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.1 13/03/2019

பெயர் - கோவிந்தராஜ் தந்தை/கணவர் பெயர்

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

முதல் விசாரணை :- நான் இவ்வழக்கின் முதல் வாதி ஆவேன். எனது பக்க முதல் விசாரணையை நிருபண பிரமாண பத்திரிக்கையாக தாக்கல் செய்கின்றேன். 05.01.1990 தேதியிட்ட செட்டில்மெண்டு பத்திரத்தின் அசல் ஆவணம் வா.சா.ஆ.1 ஆகும். 18.06.1990 தேதியிட்ட எங்களது பெயருக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். நான் அம்பத்தூர் உதவி காவல் ஆய்வாளருக்கு கொடுத்த புகாரின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும்.

(மேலும் சில ஆவணங்கள் குறியீடு செய்வதற்கு வேண்டி வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)